தந்தை பெரியார் 146வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமூக நீதி உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், எம்.லியாகத்அலி, இராசு.சந்தோஷ், அ.ரெத்தினம், எம்.வேலுச்சாமி, செந்தாமரை பாலு, வே.ராஜேஷ், சி.அரங்கநாயகம், க.கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இராம. செல்வராஜ்,ஆ.மரிய எட்வின், மா.மணிவேலன், புதுநகர் குமார், கி.சுப்பிரமணியன், டி.அப்புக்காளை, வி. ஏ. டி.சி ராஜேந்திரன், மு.க.அறிவுடைநம்பி, பா.ரெங்கராஜ், ஆ.ஜேம்ஸ், எம்.பால்ராஜ், கே.எம்.எஸ்.குமார், தியாகு, முத்துக்கருப்பன், ஏ.எல்.கணேசன், பெர்னாட்ஷா, ஆர்.சபாபதி ராம.பாலு, ரவி, மாரியப்பன், பிரேம் ஆனந்த் , வழக்கறிஞர் ஆனந்த் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் தி.மு.க. அமைப்புச் செயலாளர் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களது மனைவி ஜாக்குலின் மறைவையொட்டி அன்னாரது உடலுக்கு அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருப்பத்தூர், செப். 19 - திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் ஜோலார்பேட்டை நந்தினி மஹாலில் இன்று (19.09.2024 - வியாழக்கிழமை) காலை 9.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில்

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

அது சமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் புதிதாக

2 வாகன ஓட்டுநர்கள் - 1 வாகன சீராளருக்குப் பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, செப். 19 - தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாக இரண்டு வாகன ஓட்டுநர்கள் -

கருணை அடிப்படையில் ஒரு வாகன சீராளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இரண்டு வாகன ஓட்டுநர்கள், ஒரு வாகன சீராளர் என மூவருக்கும் தலைமைச் செயலகத்தில் நேற்று (18.9.2024) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அரும்பணிகளைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , செய்தி மக்கள் தொடர்புத் துறையில் காலியாக இருக்கும் திருப்பூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு ஆனந்தன், திருப்பத்தூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு எம். தமிழரசு ஆகியோரையும், மதுரை மாவட்டத்தில் வாகன சீராளர் பணியிடத்திற்குக் கருணை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள திருமதி.வெ.சித்ராதேவி அவர்களையும் பணி நியமனங்கள் செய்து உரிய ஆணைகளை தலைமைச் செயலகத்தில் நேற்று (18.9.2024) நேரில் வழங்கி, வாழ்த்துகள் கூறியதுடன் சிறப்பாகவும் பொறுப்பாகவும் பணிபுரியுமாறும் அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் செயலாளர் வே.ராஜாராமன், மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

நெல்லை மாவட்டம் – இராதாபுரத்தில்

தேசிய பேரிடர் மீட்புக் குழு மண்டல செயலாற்றும் மையம்!

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, செப். 19 - நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் தேசிய பேரிடர் மீட்புக்குழு மண்டல செயலாற்றும் மையத்தினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு. கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ்,தேசிய பேரிடர் மீட்பு படை (அரக்கோணம்) துணை கமாண்டன்ட் ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.இந்த மண்டல அலுவலகத்தில் தேசிய பேரிடர் குழுவினர் 32 பேர் நவீன உபகரணங்களுடன் முகாமிட்டு இருப்பார்கள்.

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டியுள்ள கேரள மாநில பேரிடர் சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மண்டல தேசிய பேரிடர் மையம் செயல்பட உள்ளது.

இந்தியாவில் 16 இடங்களில் துணை ராணுவப் படையின் கீழ் தேசிய பேரிடர் மையம் இயங்கி வருகிறது.இதன் ஒரு அங்கமாக தமிழகத்தில் அரக்கோணத்தில் இந்த மையம் செயல்பட்டு வரும் நிலையில், இந்த மையத்தின் மூலம் கேரளா,ஆந்திரா,கர்நாடகா ஆகிய பகுதிகளில் பேரிடர் சமயங்களில் இந்த குழுவினர் சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு படை மண்டலத்தின் கீழ் கேரள மாநிலம் திருச்சூரிலும் அந்தமான் நிக்கோபார் தீவிலும், சென்னையிலும் மண்டல தேசிய பேரிடர் மீட்பு படையின் மண்டலம் செயல்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக தற்பொழுது 4 வது இடமாக நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் தேசிய பேரிடர் மீட்பு படை மண்டல அலுவலகம் அமைக்கப் படுகிறது.32 பேர் கொண்ட தேசிய பேரிடர் குழு இராதாபுரம் மண்டலமையத்தில் 24 மணி நேரமும் பணியில் இருக்கும். அதிநவீன மீட்பு உபகரணங்கள்,தொலைதொடர்பு சாதனங்கள்,இரசாயனம்,கதிரியக்கம் மற்றும் உயிரியல் சார்ந்த பேரிடர்களை எதிர் கொள்ளும் வகையில் உபகரணங்களும் மண்டல மையத்தில் இடம் பெறுகிறது.தற்போது இராதாபுரம் மாணவர்கள் தங்கும் விடுதியில் தற்காலிகமாக மண்டல மையம் செயல்பட தொடங்கியது.

இதன் துவக்க விழா 17.09.2024 அன்று மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தலைமையில் நடந்தது.இந்நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று தேசிய பேரிடர் மீட்பு படை மண்டல மையத்தை துவக்கி வைத்தார். பின்னர் அங்குள்ள நவீன உபகரணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

இந்தியாவில் இயற்கை பேரிடர்கள் அதிகமாக ஏற்பட்ட காலத்தில் அவர்களை பாதுகாப்பதற்கு என்ன செய்யலாம் என்பதற்காக 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி இந்த தேசிய பேரிடர் ஆணையம் ஒன்று இந்திய அளவில் உருவாக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு,முதல் கட்டமாக 6 மாநிலங்களில் 6 இடங்களில் இந்த தேசிய பேரிடர் மேலாண்மை பட்டாலியன் அமைக்கப்பட்டது. முதல் முதலாக அசாம், மேற்கு வங்காளம், ஒரிசா,தமிழ்நாடு,மகாராஷ்டிரா,குஜராத் உட்பட 6 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இந்தியா முழுவதும் 16 இடங்களில் உள்ளது.ஒவ்வொரு இடங்களிலும் ஒரு பட்டாலியன் என்று அழைப்பார்கள் பட்டாலியன் என்றால்18 குழுக்கள் இருக்கும்.ஒவ்வொரு குழுவிலும் 47 தேர்ந்தெடுக்கப்பட்ட படைவீரர்கள் இருப்பார்கள். அவர்கள் மூலம் தமிழ்நாடு, கேரளா, அந்தமான் அதேபோல பாண்டிச்சேரி உட்பட இந்த பகுதிகளுக்கு ஏதேனும் பேரிடர் ஏற்பட்டால் இந்த குழுவினர் தான் முதன் முதலாக சென்று மீட்பு பணியில் ஈடுபடுவர்.அரக்கோணத்தில் இருந்து ஏற்கனவே ஒரு மையம் கேரள மாநிலம் திருச்சூரில் ஆரம்பிக்கப்பட்டது, மூன்றாவது சென்னையில் ஒன்று ஆரம்பிப்பதற்கு உத்தரவிடப்பட்டு இன்னும் அது விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இப்போது இராதாபுரத்தில் இந்த பகுதியில ஆரம்பிக்க இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அனுமதி யோடு நம்முடைய மாவட்ட ஆட்சியர் கடுமையான முயற்சி செய்து,இந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 30 வீரர்கள் தொடர்ந்து பணியில் இருப்பார்கள்.ஏதேனும் இந்த பகுதியில் எந்த பிரச்சனையில் ஏற்பட்டாலும் உடனடியாக இவர்கள் அரக்கோணத்தில் இருக்கின்ற அந்த தலைமை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு மீட்பு பணியை செய்வார்கள். மேலும் மாநில பேரிடர் குழு, மாவட்ட அளவிலும் பேரிடர் குழு உள்ளது.அதனுடனும் இணைந்து தேசிய பேரிடர் குழுவினர் செயல்படுவார்கள். இராதாபுரத்தில் பேரிட் மீட்பு குழு மண்டல மையம் அமைந்துள்ளதற்கு தமிழக அரசு சார்பிலும் இப்பகுதி மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரமாக தேசிய பேரிடர் மையம் அமைவதற்கு நெல்லை மாவட்டம் வள்ளியூர் மற்றும் இராதாபுரம் பகுதிகளில் 5 ஏக்கர் இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

நாமக்கல், செப் 19- நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஈ.வெ.ரா அவர்களின் பிறந்த தினமான செப்.17 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிவிப்பிற்கிணங்க "சமூக நீதி நாள் " உறுதிமொழி ஏற்கப்பட்டது.

ஈ.வெ.ரா., பிறந்த தினமான செப்டம்பர் 17ஆம் தேதி ஆண்டுதோறும், "சமூக நீதி நாள்"ஆக கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில், இனமான பேராசிரியர் அரங்கத்தில் 'சமூகநீதி நாள்' உறுதிமொழியை மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில் ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து. கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா.மாயவன், மாநில நிர்வாகி இரா.நக்கீரன், மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன், நாமக்கல் மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல், சார்பு அணி நிர்வாகிகள் வ.இளம்பரிதி, பி.கிருபாகரன், ராஜவேல், முரளி, நாசர்பாஷா, கடல் அரசன் எஸ்.கார்த்திக் மற்றும் வார்டு செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் –

மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!

நாமக்கல், செப். 19 - நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் - மாணவர் அணிக்கான நேர்காணல் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், கழக மாணவர் அணி செயலாளர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கான ஒன்றிய, நகர, பேரூர், மாணவர் அணிக்கான நேர்காணல் வரும் 21.09.2024 அன்று காலை 8.00 மணிக்கு நடைபெற உள்ளது. நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், மாணவர் அணிக்காக விண்ணப்பித்த அனைவரும் இந்நேர்காணலில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் வரும் 21.09.2024 அன்று காலை 8.00 மணிக்கு நாமக்ககல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில், பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இதில், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.தமிழரசன், கே.பொன்ராஜ், வி.ஜி.கோகுல் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். எனவே, மாணவர் அணிக்கு விண்ணப்பித்துள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ், உறுப்பினர் அட்டை, கழகத்தில் ஆற்றியப் பணிகள் குறித்த அனைத்து விபரங்கள் மற்றும் உரிய சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு வருகை புரிய வேண்டும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழகம் அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மிசா எம்.பாண்டியன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு. கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று. அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18.09.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/2024-2025/தவஅ/நாள்: 16.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி (நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த **2024-25 ஆண்டிற்கான இரண்டு சி.ஆர்.ஐ.டி.பி. பணிகள் (சிப்பம் 98 மற்றும் 99)** மற்றும் **ஒரு திட்டம் சாரா பணி (சிப்பம் 100)** ஆகியவற்றிற்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.10.2024 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **23.09.2024 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம) வட்டம், சேலம்

செ.ம.தொ.இ/3732/ஒப்பந்தப்புள்ளி/2024

தேனி வடக்கு மாவட்டம் தேனி நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நகரக் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் நகர அவைத் தலைவர் துரைராஜ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற முதல்வர் கோப்பைக் காண கிரிக்கெட் போட்டியில் காரைக்குடி மாநகராட்சி ராமநாதன் செட்டியார் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவில் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளார்கள். இவர்களை பாராட்டி மாநகராட்சி மேயர் எஸ். முத்துதுரை மதிய விருந்தளித்தார். இந்த நிகழ்ச்சியில் துணை மேயர் என். குணசேகரன், பயிற்சியாளர் சரவணன் பொறியாளர் செந்தில், மாநகராட்சி உறுப்பினர்கள் கார்த்திகேயன்,முகம்மது சித்திக், விஷ்ணு பெருமாள், காரை சுரேஷ்,பாண்டி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.